**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – 2014-2015ம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கான CAT (Common Admission Test) பொது நுழைவுத்தேர்வுக்கான பயிற்சி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை**

அரசாணை (நிலை) எண் :25 நாள் : 04.03.2015

ஜய மாசி 20 , திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது.

இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடித நக எண்.ம2/10400/2014-1 நாள் 22.8.2014.

------

ஆணை :–

2014-15ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற பேரவையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

அறிவிப்பு

"தொழிற்கல்வி பயிற்றுவிக்கும் பொறியியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு படித்து தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் IIM போன்ற மைய அரசின் கல்வி நிறுவனங்களில் MBA போன்ற மேற்படிப்பு படிக்க பொது நுழைவுத் தேர்வில் (CAT- Common Admission Test) தேர்ச்சி பெற வேண்டியுள்ளதால், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 100 பொறியியல் பட்டதாரிகளை தேர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் Common Admission Test தேர்வு எழுதுவதற்கான ஆயத்த பயிற்சி அளிக்க ஒரு மாணவருக்கு ரூ.50,000/- வீதம் ரூ.50.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்".

2. நடப்பு நிதியாண்டின் புதிய அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் IIM போன்ற கல்வி நிறுவனங்கள் MBA போன்ற மேற்படிப்பு படிக்க பொது நுழைவுத் தேர்வில் (CAT- Common Admission Test) தேர்ச்சி பெறும் வகையில் ஆண்டிற்கு 100 தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு பொது நுழைவு தேர்வு பயிற்சி அளிப்பதில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கவும் இதற்காக ஒரு மாணவருக்கு ரூ.50,000/- வீதம் 100 மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக ஒப்பளிப்பு செய்தும் அதனை தாட்கோ மூலம் செயல்படுத்த இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் அவர்களுக்கு அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்திற்கான விதிமுறைகள் தனியே பின்னர் வெளியிடப்படும்.

3.இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 11520/ நிதி(இ.செ)(பணி)/2015 நாள் 2.03.2015ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
(சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை-35.
மாநில கணக்காயர், சென்னை 6/18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 1/5.
உதவி சம்பளக் கணக்கு அலுவலர்.

நகல்:-

அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (வ.செ.பொது.II)துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு-1, ஆதிந.5) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி பாகங்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.